இந்து தமிழ் திசை

ஜிப்மர் மருத்துவமனையில் உள்ளிருப்பு

மருத்துவ அதிகாரி பணிக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஜிப்மர் மருத்துவமனையில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்களுக்கு தகுதி உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதில் மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை-18, உடற்கூறியல்-2, உயிர் வேதியியல்-4, சிடிவிஎஸ்-3, கிளினிக்கல் இம்யூனாலஜி-1, பல் மருத்துவம்-1, அவசர மருத்துவம்-3, தடயவியல் மருத்துவம்-2, பொது மருத்துவம்-10, பொதுஅறுவை சிகிச்சை-16, முதியோர் மருத்துவம்-1, நுண்ணுயிரியல்-1, நியோனாட்டாலஜி-1 உட்பட 29 துறைகளில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதில் மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைமட்ட அடிப்படையில் 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும் வயது தளர்வு வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட மருத்துவ பிரிவில் எம்டி, எம்எஸ், டிஎன்பி, எம்டிஎஸ் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த பதவிக்கு ஜிப்மர் அகாடமிக் பிளாக் எதிரில் உள்ள மண்டல புற்றுநோய் மையத்தில் பிப்.9, 10, 11 ஆகிய தேதிகளில் முற்பகலில் எழுத்துத் தேர்வும், பிற்பகலில் நேர்க்காணலும் நடைபெறும். ஆர்வமுள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் 'www.jipmer.edu.in' என்ற ஜிப்மர் இணையதளத்தில் வரும் பிப்.3-ம் தேதி மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்கலாம். இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி

ஜிப்மரில்

உள்ளிருப்பு மருத்துவர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

பிப்ரவரி 9-ந்தேதி எழுத்து தேர்வு

புதுச்சேரி, ஜன.18-

புதுவை, காரைக்கால் ஜிப்மரில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணிக்கு விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. அதன்படி காலியாக உள்ள மயக்கவியல் தீவிர சிகிச்சை 18, உடற்கூறியல் 2, உயிர் வேதியியல் 4, சி.டி.வி.எஸ். 3, கிளீனிக்கல் இம்யூனாலஜி 1, பல் மருத்துவம் 1, அவசர மருத்துவம் 3, தடயவியல் 2, பொது மருத்துவம் 10, பொது அறுவை சிகிச்சை 16, முதியோர் மருத்துவம் 1, நுண்ணுயிரியல் 1 உட்பட 29 துறைகளில் 110 முதுநிலை மருத்துவ அதிகாரி பணியிடத்துக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. கல்விசாராத இந்த பணிக்கு 3 ஆண்டு பணி வழங்கப்படும். விண்ணப்பதாரர் 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இடஒதுக்கீடு, வயது தளர்வு உண்டு.

ஜிப்மர் மண்டல புற்றுநோய் மையத்தில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 9-ந் தேதி தொடங்கி 3 நாட்கள் காலையில் எழுத்து தேர்வு, மதியம் நேர்காணல் நடக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை https://jipmer.edu.in என்ற ஜிப்மர் இணையதளத்தில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 3-ந் தேதி மாலை 4.30 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த தகவலை ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தினமலர்
புதுச்சேரி | ஞாயிறு | 18.1.2026

ஜிப்மர் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜன. 18– ஜிப்மர் முதுநிலை உள்ளிருப்பு அதிகாரி பணியிடங்களுக்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புதுச்சேரி மற்றும் காரைக்கால், ஜிப்மர் மருத்துவமனையில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்களுக்கு (கல்வி சாராத 3 ஆண்டுகள் பதவிக்காலம்) தகுதியுள்ள இந்திய குடிமகன்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

அதில், மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை – 18, உடற்கூறியல் – 2, உயிர்வேதியியல் – 4,சிடிவிஎஸ் – 3, கிளினிக்கல் இம்யூனாலஜி – 1, பல் மருத்துவம் – 1, அவசர மருத்துவம் – 3, தடயவியல் மருத்துவம் – 2, பொது மருத்துவம் – 10, பொது அறுவை சிகிச்சை – 16, முதியோர் மருத்துவம் –1, நுண்ணுயிரியல்–1, நியோட்டாலஜி –1 உட்பட 29 துறைகளில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணியிடங்கள் நிரப்பப்பட வுள்ளது.

இதில், மாற்றுத்திறனாளிகளுக்கு கிடைமட்ட அடிப்படையில், 4 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஓ.பி.சி., பிரிவினருக்கு 3 ஆண்டுகள் வயது தளர்வு வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட மருத்துவ பிரிவில், எம்.டி., எம்.எஸ்., டி.என்.பி., எம்.டி.எஸ்., பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த பதவிக்கு ஜிப்மர் அகாடமிக் பிளாக் எதிரில் உள்ள மண்டல புற்றுநோய் மையத்தில், வரும் 9, 10, 11 ஆகிய தேதிகளில் முற்பகலில் எழுத்து தேர்வும், பிற்கலில் நேர்க்காணலும், நடைபெறும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் www.jipmer.edu.in. என்ற ஜிப்மர் இணையதளத்தில் அடுத்த மாதம் 3ம் தேதி, மாலை 4:30 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தினமணி

ஜிப்மரில் 110 உள்ளிருப்பு மருத்துவர்கள் பணிக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜன.17: புதுச்சேரி, காரைக்கால் ஜிப்மர் வளாகங்களில் 110 முதுநிலை உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி பணிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மயக்கவியல், தீவிர சிகிச்சை 18, உடற்கூறு இயல் 2, உயிர் வேதியியல் 4, சிடிவிஎஸ் 3, கிளினிக்கல் இம்யூனாலஜி 1, பல் மருத்துவம் 1, அவசர மருத்துவம் 3, தடயவியல் 2, பொது மருத்துவம் 10, பொது அறுவை சிகிச்சை 16, முதியோர் மருத்துவம் 1, நுண்ணுயிரியல் 1 உள்பட 29 துறைகளில் 110 முதுநிலை மருத்துவ அதிகாரிகள் பணியிடங்களுக்குத் தகுதியான வர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வி சாராத இந்தப் பணிகளுக்கு 3 ஆண்டு பதவி வழங்கப்படும். விண்ணப்பிப்போர் 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இட ஒதுக்கீடு வயது தளர்வு உண்டு.

புதுச்சேரி ஜிப்மர் மண்டல புற்றுநோய் மையத்தில் பிப்ரவரி 9, 10, 11- ஆம் தேதிகளில் காலையில் எழுத்துத் தேர்வும், மதியம் நேர்காணலும் நடக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை ஜிப்மர் இணையதளத்தில் பிப்ரவரி 3-ஆம் தேதி மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்கலாம் என ஜிப்மர் இயக்குநர் வீர்சிங் நெகி சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.